உ

சிவமயம். 5802

மாயூரம்

கிருஷ்ணையரென்று வழங்குகின்ற

பிரம்மஸ்ரீ

கிருஷ்ணாநந்தயோகிகள்

இயற்றிய

# மயிலைச்

# சிலேடை வெண்பா.

இது

திருவாவடுதுறையாதீனம

மாயூரம்

ஸ்ரீ மாயூரநாதஸ்வாமி கோயிற் கட்டளை

ஸ்ரீ சுந்தரலிங்கத்தம்பிரானவர்கள்

பொருளுதவியால்

கும்பகோணம்

'ஸ்ரீவித்தியா அச்சுக்கூடத்தில்,'

பதிப்பிக்கப்பட்டது.

சோபகிருது வரு கும்பரவி.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41

# பாயிரம்.

சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

பிரம்ஹஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்களியற்றியது.

---

குயிலைப் புரந்தவிடக் கோச்சிம்புள் வாழ்தென்
மயிலைச் சிலேடைவெண்பா மாண்பி—னியலுறவே
கண்ணன் வடமொழிப்பேர் கைக்கொண்மறை யோன்றமிழ்தே
ரண்ணன் மொழிந்தனனா லாய்ந்து.

கும்பகோணம் டவுன்ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்

பிரம்ஹஸ்ரீ-பின்னத்தூர் அ. நாராயணசாமியையரவர்கள்

இயற்றியது.

ஏரார் மயிலை யிறையெம் பெருமாற்குச்
சீரார் சிலேடைவெண்பாச் செப்பினான்—பாரோதும்
வாகியல்பைந் தண்டமிழ்சேர் வண்கிருட்டி ணானந்த
யோகியெனும் வேதியன்ன் கோர்ந்து.

சிங்கவனம் சுப்பிரமணிய பாரதியாரவர்கள் குமார

பிரம்ஹஸ்ரீ- சுந்தரேசபாரதியார் இயற்றியது.

மயிலைச் சிலேடைவெண்பா மாலையுல குய்யக்
குயிலையிடங் கொண்டார்மேற் கூறி—மயலை
வெருட்டிணா னந்தம் வினையறுத்தான் சீர்த்திக்
கிருட்டிணா னந்தயோ கி.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS

## திருவாவடுதுறையாதீனம் இராயசம்
## பொன்னுசாமிபிள்ளை யென்கிற
## மகா-ஈ-ஈ ஸ்ரீ. பொன்னுசாமிசெட்டியாரவர்கள் இயற்றியன

எண்ணிலா மான்மியஞ்சேர் மான்மயிலைப் பதியமரு மீசனுக், குண்ணிலா வியவன்பி னிருபொருள்வெண் பாமாலை யுரைத்தே யிந்தத், திண்ணிலா வியவுலகி னுற்பொருளு மெய்துநலஞ் சேர்ந் தானந்தத், தண்ணிலா மயிலையிற்கிருஷ்ண ஞானந்த யோகியெனத் தகுமேலோனே.

மற்றதையச் சியற்றினனம் மயிலையஞ்ச ஞாயகிசேர் மாயூரேச, ருற்றபெருங் கட்டளைமேற் கொண்டவனந் துறைசையெனு முயரா தீனக், கற்றவடி யார்கள் குழாத் துற்றபெருந் தகுதியதி காரத்துற் றோன், சொற்றிசெங் தரலிங்க மாமுனிவ னெனும்பெயர்கொ ளேய் மையோனே.

## மாயூரம் உபயபாஷா வித்துவசிரேஷ்டராகிய
## ஸ்ரீ@ஸ்ரீ- முத்துவைத்தியநாத தேசிகரவர்கள் இயற்றியது.

### வெண்பா.

---

செல்வச் செழுமயிலைச் செஞ்சொற் சிலேடை—வெண்பா
நல்வைப்புப் பொன்னூறு நல்கினான்—கல்விப்
பெரியனவன் பேர்கிருட்டி ஞானந்த யோகி
யுரியனுமை மாமயிலா ரூர்.

### இந்நூலாசிரியர் மாணாக்கர்
### மாயூரம் V. தண்டபாணிதேசிகர் இயற்றியன.

காவிரி நதியாற் பலவள மோங்குங் கவின்பெறு மயிலைவாழ் பரற்கு,மாவிரதங்கொ ளடியவர்தம்பான் மனமுற மகிழ்ந்திருந் தருள்வோன், பாவியலிசைநா டகமெனுந் தமிழைப் பண்புறத் தெரிந் தெடுத்துரைப்போன், பூவியலுறுவே தாந்தசித்தாந்தப் பொருளுணர் சமரசநிலையோன்.

ஓதுமாமயிலைக் கிருட்டிணானந்த யோகியென் றுறுபெயர்கொண்டோன், ஈதலினெனக்கு மியற்றமி ழுணர்த்திக் காட்டிய நற்குருவானோன், மாதுபாதியனை பரமெனக்கொண்ட மனமுறு வேதியர் குலத்தோன், நீதிலாமயிலைச் சிலேடைவெண்பாவைச் சிறப்புற வனைந்தனனதனை.

கருணையின் மகிழ்ந்தொண் ருயிரமாக்கிக் காணியவிழைவினைச் சிதைவித், தருளினன் றுறைசைப் பெரியவாதீனத் தன்பம ரடியாரின் மிக்கோன் பொருவின்மாயூர நாதர்கட் டளையிற் பொலிவுறு புனிதன்மாலயனுந், துருவுசேவடிக டிருவுளத் தகலாச் சுந்தர லிங்க மாதவனே.

### கோயம்புத்தூர் காலேஜ் தமிழ்ப் பிரதமபண்டிதர்
### கும்பகோணம் சபாபதிபிள்ளையவர்களியற்றியது.

### நேரிசை வெண்பா.

---

கயிலைப் பெருமான் கவுரியொடு மேவு
மயிலைச் சிலேடைவெண்பா மன்னு—மியல்வழுவா
தோதினா னேர் கிருட்டி ணானந்த யோகியென்பான்
கோதிலா நற்கவிஞர் கோன்.

# குறிப்புக்கள்.

| பாட்டு. | வரி. | |
|---|---|---|
| 1 | 4 | கால் அயிலும் மாலை = சர்ப்பாபரணம். |
| 2 | 4 | உக்கர் = விடைவாகனத்தர். உள்வார் = கருதப்படுபவர் |
| 4 | 3 | ஆன் நத்தார் தலம் செலுத்தார் = விரும்பாரிடத்தில் விடையை நடத்தார். |
| 10 | 2 | வினை மாய் ஊர் அநாதர். [ந்தச் செய்யார். |
| 13 | 3 | தீரர் உள் நையத்தரார்-வன்மையுடையார் மனம் வரு |
| 17 | 3 | தாய் = தாவி. |
| 24 | 3 | மாவடியார் = மாமரத்தின் கீழிருப்பவர். |
| 26 | 1 | பூகம் நகு அம் கா. |
| 35 | 4 | பார்க்கு அவிக்குமுன் உள்வார் = பூமியில் தகனஞ்செய்யுமுன் நினைத்தருள்வார். |
| 43 | 2 | மஞ்சாடி = நோக்க யலர்மரமுமாம். [விர ணிரை. |
| 52 | 3 | அணிந்து, இவர்ந்து, பாகமுறும். ஆறு, ஆ, தாரத்தார், |
| 58 | 3 | அம்பு, ஊண், தார்.—படியிடந்தோன், ஆலம், பணி- விர ணிரை. |
| 62 | 3 | மயிலை = இருவாட்சி |
| 70 | 3 | கை உரம் உரு கம் = மான் அங்கு அஞ்சு ஆறு = விர ணிரை. அஞ்சு = பஞ்சாக்கரம். ஆறு = கங்கை |
| 72 | 3 | அச்சு இதால் = இச்சரீரத்தால். |
| 76 | 4 | மூவர் = மூவாறென்பதன் விகாரம் |
| 80 | 3 | அலத்தார் பின் போது உமை = திருமாலின் தங்கையாகிய உமாதேவியார். அலம் = கலப்பை. |
| 81 | 2 | வாரணம் = வாழையுமாம் |
| 81 | 3 | வேகம் ஆறு ஆறு = வேகந்தணிந்த கங்கை. |
| 83 | 4 | ஆயின் ஒன்று ஆவார் = உமாதேவியாரோடு பொருந்தி எழுந்தருளும் விடையார். [ளவர் |
| 85 | 1 | நத்திய ஆன் = விரும்பிய நந்தி, காவேரி மத்தியிலுள் |
| 87 | 2 | மான் தாள் = பூவையொக்குந்தாள். வினைத்தொகை |
| 89 | 3 | கண்ணனார் = திருமால். |
| 90 | 3 | வளை அடு ஐ = சங்கமேந்திய திருமால். |
| 97 | 3 | புலி = வண்டு. |
| 99 | 3 | தாரார் தருவார் = இன்னல் இன்பம் விர ணிரை. |
| 100 | 3 | மால் மெய்யானது எவார்- திருமால் மெய்யாகிய அம்பையுடையார். |

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மயிலைச்

# சிலேடை வெண்பா.

## காப்பு.

அகத்திய விநாயகர்.

கயிலைக் கிறைவன் கருணைமயி லாடு
மயிலைச் சிலேடைவெண்பா மாலை—செயலிற்
கலசமுனிக் கூறவருள் கட்கயமு கன்றாட்
சலசமுனிக் கூறத் தரும்

தமிழாசிரியர்.

தேர்முத் தமிழ்க்கல்விச் சிங்க வனத்தியலார்
சீர்பெற் றரசிருந்த சிங்கமெனப்—பார்மறையோர்
பேசிப் புகழ்சுப் பிரமணிய பாரதிதான்
பூசிப்ப னெஞ்சுட் புனைந்து.

நூல்.

பூவார் தடமுந் தடங்கரையும் போதகஞ்சேர்
மாவார் பொழிலார் மயிலையே—யோவாதெக்
காலையிலு மாலையார் கண்ணனயன் போற்றுமெழிற்
காலையிலுமாலையார் காப்பு.

தேனூறு செய்யுந் திகழ்மா மதின்முடியும்
வானூறு மேற்சென் மயிலையே—கானேறு
கண்ணப்ப ருக்கருள்வார் காய்மதியென் றங்கியெனுங்
கண்ணப்ப ருக்கருள்வார் காப்பு. ௨

நீளரவத் தண்கிடங்கு நேரிழையார் கண்களுந்திண்
வாளரவ மீக்கொண் மயிலையே—வேளெரிய
வானகங்கொண் டாடுவார் வல்லரக்க னைக்கழற்கால்
வானகங்கொண் டாடுவார் வைப்பு. ௩

சோலைதொறுங் கோயிற் சுடர்மணிப்பொன் வாயிறொறு
மாலையணின் றாடு மயிலையே—வேலைசுலாங்
காலத்தானத்தார் தலஞ்செலுத்தார் தங்குதிருத்
தாலத்தா னத்தார் தலம். ௪

சேமமுறு மன்பர்களுந் திண்மதிலுஞ் சேண்மருவு
மாமதியார்ந் தோங்கு மயிலையே—தாமதஞ்சே
ராசையுடை யார்க்கருளா ராணிக்கெட் டாதகைவி
லாசை யுடையா ரகம். ௫

கானவரம் பாயுங் கணிகையருங் காவிரியும்
வானவரங் காடு மயிலையே—தீநெறிக்கே
தாண்டவத்தார் தாமறியார் தாரணிபோற் றுங்கவுரி
தாண்டவத்தார் தாமறியார் சார்பு. ௬

செல்வளையுங் கண்ணினர்தஞ் செங்கைகளும் பொன்னிபுஞ்
வால்வளைக ளார்க்கு மயிலையே—பால்வளைமா [சோ
லம்பரத்த ராளுடைய பிள்ளைக் கருண்ஞான
வம்பரத்த ராளு மகம்.

தேங்கு கிடங்கறலுந் திண்வாளை யுந்தரணி
வாங்கு திரை மோது மயிலையே—தாங்குமுடிக்
கைவல்லி யத்தார் கரைந்தூறிப் பார்க்கருணைக்
கைவல்லி யத்தார் கலப்பு. ௫

காற்குவளை நூபுரத்தார் கண்ணுஞ் செறுவுநெடு
மாற்குவளை காட்டு மயிலையே—மேற்குவளை
யீர மதிச்சடையா னொன்றுவினை யார்வினையை
யீர மதிச்சடையா ரில்.

நேசமட வார்நுதலு நீடுலகத் தோருமதி
மாசகல மன்னு மயிலையே—பாசவினை
மாயூர நாதனார் மாவிழற்கீழ்ப் பூசைபுரி
மாயூர நாதனார் வைப்பு. ௭

விண்டலங்காண் கோபுரமு மெல்லியலா ராடரங்கு
மண்டலங்கொண் டாடு மயிலையே—தொண்டு
விரிஞ்சன் படைப்பார் விழைவளிப்பார் நல்கும்
விரிஞ்சன் படைப்பார் விருப்பு ௮

சீதநதிப் பொன்னியுமேற் சென்றொளிரு மாளிகையு
மாதரணி யாடு மயிலையே—யோதத்
திருப்பாற் கடலார்கட் சேவடிக்கீ ழுள்ளந்
திருப்பாற் கடலார் சிறப்பு. ௯

காரஞ் செறிகுழலார் கண்ணு மடியருந்தே
வாரம்பா டுஞ்சீர் மயிலையே—பேரன்பாற்
றீரருணை யத்தரார் சிந்திக்கில் வன்பிறவி
தீரருணை யத்தரார் சேர்வு. ௰

மாணிழையார் கண்களும்பொன் மாறுகடை வீதிகளும்
வாணிகர்சீ ரோங்கு மயிலையே—வேணிமிசை
வாங்குதிரை யேற்றினார் வாதவூ ரர்க்குமறை
வாங்குதிரை யேற்றினார் வைப்பு. ௰௪

கந்தணிய வாவணமு நாளுமணி மாடமுஞ்செல்
வந்தணியா வேறு மயிலையே—முந்திதழிப்
பத்தியளித் தாரார் பதமுற் றிலீபனுறப்
பத்தியளித் தாரார் பதம். ௰௫

தேன்சிலம்பு பூங்குழலார் கண்ணுஞ் செறிபறம்பும்
வான்சிலம்பு நேரு மயிலையே—நான்சிலம்ப
வண்டம் படைத்தா ரவிர்சடைமேற் பல்கோடி
யண்டம் படைத்தா ரகம். ௰௬

தூய்மைசேர் நற்றவருந் தோகையர்வாட் கண்களுநீள்
வாய்மையே போற்று மயிலையே—போய்வினையாற்
றுயனையா ருட்கருத்த ரிக்கவொட்டா ரன்பரையெந்
தாயனையா ருட்கருத்தர் சார்பு. ௰௭

கூவித் திரியுங் குயிலு மிளைஞருங்கை
மாவிற் பொலியு மயிலையே—தீவினைக்குத்
தோற்றோன்மே லேற்றார் துணைத்தாள் முனிவருந்து
தோற்றோன்மே லேற்றார் துறை. ௰௮

கஞ்சமலர் வாவிகளுங் காதலினன் மாதருந்து
மஞ்சனங்க ளாடு மயிலையே—யஞ்சவரு
பாவங் களைவார் பணிவார்க் கணிதமிழ்ச்சொற்
பாவங் களைவார் பதி. ௰௯

மேவுறுமெய் யன்பருநீள் வீதிகளுஞ் செல்கதிகாண்
மாவிரத மாரு மயிலையே—தாவில்
பரவைக் கருணையத்தர் பத்திவலைக் குள்ளா
பரவைக் கருணையத்தர் பற்று. ௨௦

மண்யுபுணற் றண்டடமு மாதர் மலர்க்குழலும்
வண்டினங்க ளாரு மயிலையே—வ, ழ் ரைசூழ்
கங்கா தரனூர் கதஞ்செறியுங் கஞ்சனொரு
கங்கா தரனூர் களிப்பு. ௨௧

பாலனஞ்செய் சத்திரமும் பங்கயமு மிக்கார்க்கும
வாலனங்க ளாட்டு மயிலையே—ஞாலமிசை
வாசனத்த னத்தனூர் வந்துதொழக் கண்டவிடை
வாகனத்த னத்தனூர் வைப்பு. ௨௨

தாயாதி செற்ற தகையினருந் ண்டடமு
மாபாடி யங்கூர் மயிலையே—கோபாலன்
பாலன் புடையவரன் பாற்றினமும் பற்றுமுளப்
பாலன் புடையவர்தம் பற்று. ௨௩

கானந்து பூம்பொழிலுங் கான்மணிமா டக்கொடியும்
வானந் தடுக்கு மயிலையே—யானந்த
மாவடியார் சேவடியார் வன்பகழி மாலையன்றாழ்
மாவடியார் சேவடியார் வைப்பு. ௨௪

மான்மணிசெய் மாடக் கொடியு மறுகிடமும்
வான்மணியு றுத்து மயிலையே—மான்மழுவா
ரத்தத்தா ரானு ரகிலம்ப டைத்தளிப்பா
ளத்தத்தா ரானூரகம். ௨௫

பூகநகங் காமுறெறி பொன்னித் திரையுமிளிர்
மாகநகங் காட்டு மயிலையே—யேகர்
கயிலைமலை யில்லார் கதிர்த்தெழுவான் சோதிக்
கயிலைமலை யில்லார் கலப்பு. ௧௮

தோரணங்கள் சூழ்மறுகுஞ் சோலையிற்றே னுஞ்செறுவார்
வாரணங்க ளாரு மயிலையே—பூரணகும்
பங்களா மாதரவார்க் கொங்கைப் பருப்பதமாண்
பங்களா மாதரவார் பற்று. ௧௯

விண்டகழ னிக்கழுநீர் வேரியுய்வா வித்துறையும்
வண்டரள நல்கு மயிலையே—தொண்டரமர்
பாகத்தாள் வாரத்தர் பச்சைமயி லம்மையிடப்
பாகத்தாள் வாரத்தர் பற்று. ௨௰

நந்திருப்பு நெஞ்சினரு நாஞ்சிலிடை யென்றுமச்சு
வந்திருப்ப நோக்கு மயிலையே—தந்திருத்தா
ணம்பாற் கருத்துடையார் நாளு நலிந்தடைந்த
நம்பாற் கருத்துடையார் நாடு. ௨௧

கோதி லரவொலியுங் கோக்குமரர் நாவொலியு
மாதவர்வாய்க் கேட்கு மயிலையே—காதலித்தார்ப்
பஞ்சாக் கரத்தார் படைக்கண் படவொட்டாப்
பஞ்சாக் கரத்தார் பதம். ௨௨

ஓதுசிவ நேசர்களு மோங்குகுயிற் சோலைகளு
மாதவஞ்சார்ந் தோங்கு மயிலையே—போதி
னியலஞ்ச னுயகியா ரேத்தரியார் பீலி
யியலஞ்ச னுயகியா ரில். ௨௩

மானனையார் நன்னுதலு மாமணிப்பொன் மாளிகையும்
வானவிலை யொக்கு மயிலையே—தீனமற
வாங்காள கண்ட ரலையார் கலிநலிய
வாங்காள கண்ட ரகம். ௧௨

சாபநுத லார்குயமுந் தாழ்ந்துதரி சிப்பவரு
மாபந்த நீக்கு மயிலையே—நீபமுட
னக்கங் கடுக்கையா ராரத்தார் மாரனைத்தீ
யக்கங் கடுக்கையா ரார்வு. ௧௩

பண்டருமின் னார்குழலும் பல்செறுவும் பொன்வரிநறும்
வண்டலம ருஞ்சீர் மயிலையே—தெண்டிரைசூழ்
கூப்பிட்டார் கண்ணார் குரைகழலா ருள்ளுருகிக்
கூப்பிட்டார் கண்ணார் குடி. ௧௪

தண்டா வயற்றலையுந் தண்கமுகந் தண்டலையும்
வண்டான மல்கு மயிலையே—விண்டோவு
பார்க்கவிக்கு முன்னைப் படிக்கருள்வார் பாடுநர்மெய்ப்
பார்க்கவிக்கு முன்னருள்வார் பற்று. ௧௫

சாதகநூற் கல்வியருஞ் சாளரமு மேன்மலைய
வாதங்கு லாவு மயிலையே—போதும்
பருந்தனத்தார் பக்கத்தார் பாகத்தார் பச்சைப்
பருந்தனத்தார் பக்கத்தார் பற்று. ௧௬

கன்னியரும் வேதியர்யா கத்தலமு மாய்ந்துதிரி
வன்னிவளர்த் தோது மயிலையே—துன்னும்
பரிகரிக்க வந்துடைத்தார் பண்பினன்பர் துன்பம்
பரிகரிக்க வந்துடைத்தார் பற்று. ௧௭

MAHAMAHOPADHYAYA
U.V. SWAMINATHA IYER LIBRA
THIRUVANMIYUR MADRAS

ஆய்முத்த வான்கழையு மன்பர்க் கரிவையரும
வாய்முத்த நல்கு மயிலையே—வேய்முத்தர்
வில்லுவந்தா ரம்பரியார் வேணியார் மேருவரை
வில்லுவந்தா ரம்பரியார் வீடு. ௨௮

மீதருமா டத்தலமு மேதகுமில் வாழ்க்கையரு
மாதருமங் கூடு மயிலையே—யோதிதிகழ்
வள்ளலா ரத்தர் வலரயா தளித்துறும்போர்
வள்ளலா ரத்தர் மனை. ௨௯

காணிக் கரையுங் கடாவுபடைச் சாலுமொளி
மாணிக்கங் காலு மயிலையே—வேணிக்க
ணாற்றுறை யாற்று ரறிந்துதவ முற்பிறப்பி
லாற்றுறை யாற்று ரகம். ௩௰

ஆசைமட வார்தனமு மன்பினிணை வாருமன
மாசையங்க றக்கு மயிலையே—வீசு
கடுக்கையா ரேற்றூர் கலாபமயில் கூட்டுங்
கடுக்கையா ரேற்றூர் கலப்பு. ௩௧

காமருபூஞ் சாளரத்திற் காமினியோர் பொன்னியிற்கோன்
மாமதிவந் தாடு மயிலையே—தாமறையோன்
வல்லவியி லக்குமிக்கார் மாமொழித்தார் மாறனிடு
வல்லவியி லக்குமிக்கார் வாழ்வு. ௩௨

விஞ்சா மதிற்புறமு மேனிலைமின் னுருமெழின்
மஞ்சாடி நோக்கு மயிலையே—யஞ்சா
நலந்தருவார் நாடுபெற நல்குவரங் கைக்க
நலந்தருவார் நாடு நகர். ௩௩

வஞ்சியர்பூங் குந்தளத்து மாளிகைமேற் பஞ்சரத்து
மஞ்சரிக ளேங்கு மயிலையே—துஞ்சகம
ஞக்கந்த ரத்த ரணியாழி வாங்கியந
லாக்கந்த ரத்தரகம். ௪௨

தேன்மொழியார் கொங்கைகளுஞ் சிந்துரஞ்சேர் மாமறுகு
மான்மதங்க ளூறு மயிலையே—பான்முணக்கும்
வாய்ப்பாலன் பாட்டினர் வஞ்சலியார் பாம்புபுலி
வாய்ப்பாலன் பாட்டினர் வைப்பு. ௪௩

இந்திரச்செல் வத்தினரு மிட்டசித்தி வேண்டுநரு
மந்திரஞ்செய் தேற்று மயிலையே—முந்தரிக்குச்
சக்கரந்தந் தாள்வலவர் தண்ணருளா மென்மருக்குச்
சக்கரந்தந் தாள்வலவர் சார்பு. ௪௪

ஆலுமலர்ச் சோலையினு மைந்தவதா ரத்துமுறு
மாலதிகஞ் சாடு மயிலையே—மேலா
மலையமலைப் பாகர் மனத்துறைவார் கொன்றை
மலையமலைப் பாகர் மனை. ௪௫

வேட்டங் குறைய விழைவாரும் வீரருமெய்
வாட்டந் தவிரு மயிலையே—யாட்டம்
புலியூர் முடியார் புனற்கங்கை யோடம்
புலியூர் முடியார் புலம். ௪௬

தேன்படுபொற் றாமரையுஞ் சேர்ந்துறுமெய் பான்மையரும்
வான்பொய்கை மன்னு மயிலையே—மான்பரவு
பாலந் தரங்கத்தார் பண்டறியார் பத்திவிடார்.
பாலந் தரங்கத்தார் பற்று. ௪௭

தாமமுலை வந்தியருஞ் சார்ந்திடபத் தாமெரு
மாமகப்பே றெய்து மயிலையே—பூமன்
மயிலைமணக் குங்குழல்சேர் மாவடிக்க ணோடு
மயிலைமணக் குங்குழகர் வைப்பு ௩௨

தேனையங்கொள் மென்மொழியார் சேல்விழியுந் தாழ்குழலு
மானையங்க ளெக்கு மயிலையே—வானியங்கு
சாயா வனத்தர் தலம்புகழ்கா சிக்குநிகர்
சாயா வனத்தர் தலம். ௩௩

கோல்வருமைக் கண்ணார் குயமும் பொழினறவு
மால்வரப்பு டைக்கு மயிலையே—மேல்வருபே
ராறுமுகந் தந்தா ரணிமுடிவைத் தாரிமையோர்க்
காறுமுகந் தந்தா ரகம். ௩௪

பூவையர்தம் வாணுதலும் பூங்கனிபோற் பாலுவுந்தே
மாவினலஞ் சேரு மயிலையே—யாவலுறு
மண்ணுறைசை யுற்றார் மனையகன்று ருள்ளிருந்து
மண்ணுறைசை யுற்றார் மனை. ௩௫

காவைக் கழைக்கொழுந்துங் காவிரிநீ ரும்மரிய
மாவைப் புடைக்கு மயிலையே—பாவிந்தே
யென்னப்ப னென்பார்கட் கின்னமுத மீசனவ
னென்னப்ப னென்பார்க் கிடம். ௩௬

ஆனைவரு ஞானவா ராய் வாருஞ் சிறுருமதி
மானையழைக் குஞ்சீர் மயிலையே—மீனவன்முன்
கல்லானைக் கிட்டார் கழையுட் கசிந்துருகிக்
கல்லானைக் கிட்டார் கலப்பு. ௩௭

தாவிளைஞர் போர்த்தொழிலாற் றையலர்க டந்தனத்தான்
மாவலவங் காட்டு மயிலையே—பூவலர்கை
வேதாக மம்பணித்தார் வேணிவைத்தார் மன்னுயிர்க்கா
வேதாக மம்பணித்தார் வீடு.

காய்மதிகாண் பானலரூஉங் கண்டுநிலாச் சார்ந்தவரும்
வாய்மலர்ந்து போற்று மயிலையே—சேயிதழி
மாவடுமென் றூர்வார் வரைப்புயத்தார் மூன்றொருவர்
மாவடுமென் றூர்வார் வயின். ௬௯

காருலவு மாங்குயிலுங் காளையர்தோ ளுந்திருக்கு
மாரனையம் பாடு மயிலையே—வாரமுறு
மானக்கஞ் சாறர் மலர்க்கை யுரமுருக்கம்
மானக்கஞ் சாறர் மனை ௭௦

ஆயிழையார் தங்கொழுநர்க் காம்ப லவிழ்ந்திரவில்
வாயிதழ்த்தே னூட்டு மயிலையே—வேயிசைக்கு
மானாய னாரிசைகேட் டன்போ வெந்தருளு
மானாய னாரிசையு மார்வு. ௭௧

செய்குன்ற மாளிகையுஞ் சேயிழையார் கண்ணழகும்
வைகுந்தங் காட்டு மயிலையே—மெய்யன்பர்
நஞ்சச்சி தானந்த நாடியிரார் நாடுருவ
நஞ்சச்சி தானந்தர் நாடு. ௭௨

கோதையர்ப யோதரமுங் கூரகழி யுந்தாழா
மாதுளங்க ளெக்கு மயிலையே—போதுஞ்
சனிப்பிறப்பி லாழாது தாங்குகடைக் கண்ணோர்
சனிப்பிறப்பி லாதார்தலம். ௭௩

MAHAMAHOPADHYAYA
U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR, MADRAS-41.

மாசறுமின் னார்குழலு மன்னவரு மேவலரால்
வாசிக்கைசெய் தேறு மயிலையே—பூசைபுரி
தாமோ தரனார் சலசத் தவர்முதலோர்
தாமோ தரனார் தலம். ௭

கல்வியறி வுள்ளாருங் கன்னியர்பாட் டும்பண்ணே
வல்லகியின் மிக்காரு மயிலையே—புல்லுநர்மெய்ப்
புத்திக் களையார் புகரறப்போ திக்குமொழிப்
புத்திக் களையார் புலம். ௭௫

நேசரைமின் னேருமிழி னீள்கழையி னூணறவும்
வாசுகியீங் கென்னு மயிலையே—மாசிலின்பப்
பண்பாடு வார்மூவர் பைந்தமிழ்ப்பா மாலைபுனை
பண்பாடு வார்மூவர் பற்று. ௭௬

மீளியர்வெம் போர்க்களத்தும் வேளினோர் திண்புயத்தும்
வாளிபைந்து வீசு மயிலையே—தாளிலொரு
புல்விடுவா ரேற்கொடிய பொய்வினைமாய்த் திட்டவரைப்
புல்விடுவா ரேற்கும் புரி. ௭௭

மாசணமல் குந்தெருவின் மன்னவரும் யோகியரும்
வாசியடக் குஞ்சீர் மயிலையே—பேசுமறை
மாவாக் கியவடிவார் மாறனுக்கன் றேறிபரி
மாவாக் கியவடிவார் வைப்பு. ௭௮

கோபவித ழார்குழலுங் கூட்டியபாட் டுஞ்சரிக
மாபதநா டுஞ்சீர் மயிலையே—சாபச்
சிலம்பா ரணத்தர் திருமுகப்பூம் பொற்றாட்
சிலம்பா ரணத்தர் சிறப்பு. ௭௯

வேகங்கண் டேர்கரியு மேல்விடப தீர்த்த மும்வான்
மாகங்கை யாட்டு மயிலையே—யாகமுறு
பொன்னம் பலத்தார்பிற் போதுமைகா ணக்குனிந்தும்
பொன்னம் பலத்தார் புரம். ௮௰

காவேரித் தண்படுகைக் கண்ணுமறை யோரகத்து
மாவா ரணஞ்சூழ் மயிலையே—தாவாவை
யாறூறு மானா ரகம்புறமா னார்வேக
மாறூறு மானா ரகம் ௮௧

காருததி யென்றகழைக் கண்டுதொழ வாலயத்தை
வாருணிய னாடு மயிலையே—தாரணையுண்
ணாசிக்கு மேற்கண்டார் நாடொளி யார்வார
ணாசிக்கு மேற்கண்டார் நாடு. ௮௨

கோகனக வாவிகளுங் கோமறுகிற் பாலரும்பல்
வாகனங்க டாவு மயிலையே—பாகமுற
வாராயி னென்றுவா ரன்பரகஞ் செல்லுமிட
மாராயி னென்றுவா ரார்வு. ௮௩

தேனிறங்கு வான்பொழிலுந் தேர்மறுகும் பைம்பொனில
வானரங் குலாவு மயிலையே—யூனரங்கா
வஞ்சுதலைத் தாரா ரகங்கரைவார்க் காடுவா
ரஞ்சுதலைத் தாரா ரகம் ௮௪

நத்தியவான் பொன்னியினு நற்கழனி மள்ளர்களு
மத்தியமார்ந் தாடு மயிலையே—முத்தியெனு
மூத்தரமா யூரத்த ருள்ளமுவப் பத்தோன்று
மூத்தரமா யூரத்த னூர். ௮௫

வேரிமுள ரித்தடமும் வேதமொழி யந்தணரும்
வாரிசமென் காட்டு மயிலையே—போரிற்
சிலையா லடிக்குவந்தார் செய்தவத்தோர்க் காகச்
சிலையா லடிக்குவந்தார் சேர்வு. ௮௬

தேமாந்துசெய் முண்டகத்துந் தேவருலா மண்டபத்து
மாமான் வதியு மயிலையே—பூமான்றுட்
கண்டங் கரியார் களிப்புறவா ராதொளிக்குங்
கண்டங் கரியார் கலப்பு. ௮௭

பாகமுற வேத்துநரும் பாவையர்த முன்றிலுநன்
மாகதிசேர்ந் தோங்கு மயிலையே—மேக
வனமா லிகையார் வழுத்துபதக் கொன்றை
வனமா லிகையார்தம் வைப்பு. ௮௮

விண்டலர்வேங் கைத்தருவு மேலோ ரிருக்கையுமாய்
வண்டருள நாடா மயிலையே—தொண்டரையாள்
கைக்குவந்தா ரங்கணனார் காண மழுமான்செங்
கைக்குவந்தா ரங்கணனார் காப்பு. ௮௯

கிள்ளைவாய் மாதர்களுங் கீழோர் மறுகிடமும்
வள்ளைவாய் மல்கு மயிலையே—வெள்ளை
வளையடையா ளத்தர் மலைமகளார் கொங்கை
வளையடையா ளத்தர் வயின். ௯௦

மேகத் தலத்திடையும் வீரரும்வீ சிப்புடைக்கு
மாகத் திசையார் மயிலையே—பாகச்சொ
னெற்றிக்க ணக்கயய சீவேர தாம்பிகைசேர்
நெற்றிக்க ணக்கர் நிலம். ௯௧

## சிலேடை வெண்பா.

ஞானியமுற் பல்பொருளுந் தன்னையுணா யோகியரு
மானியமங் கூடு மயிலையே—தேனளினப்
போதமளிப் பாருணவார் போற்றவடி யேமுயுமா
போதமளிப் பார்,நம் புலம்.

பூணகிலார் புன்னகையும் பூசைபுரி பொற்பினரும்
வாணனையொக் குஞ்சீர் மயிலையே—காணகங்க
சிந்தையரக் கண்டாரார் சேவடிக்கீழ் வைத்தளி[illegible]
சிந்தையரக் கண்டாரார் சேர்வு.

கான்செய்மணி மாளிகையுங் கைதொழுவா ருந்திலே
வான்செல்ல நீர்க்கு மயிலையே—வான்சூ[illegible]வு
மாவலரி யாகத்தார் வன்பழிதீ ரப்புடைத்தார்
மாவலரி யாகத்தார் வைப்பு.

தையலர்மைக் கண்ணிணையுந் தாவுதிரைக் காவிரியும்
வையம் புரக்கு மயிலையே—செய்யுவடிப்
பஞ்சவடிக் காமென்றார் பாலகன்றார் கன்னிகுழற்
பஞ்சவடிக் காமென்றார் பற்று. ௯௫

மெல்லியலார் நுண்ணிடைக்கும் வேட்டொருகா லுற்றவர்க்கும்
வல்லியம னஞ்சு மயிலையே—சொல்லிற்
றிருவாஞ்சி யம்பரமுத் தித்தலமென் றார்பூந்
திருவாஞ்சி யம்பரமர் சேர்வு. ௯௬

பண்டிசைதன் மாண்மியமும் பற்றுவிரை யாயரும்வாய்
வண்டிசைகொண் டாடு மயிலையே—யின்னடைப்
புலியூ ரிருந்தார், புனைந்தார்பொன் மன்றம்
புலியூ ரிருந்தார் புலம். ௯௭

...யோ டுநெருந திகமகாருய வண்டரலா
...ழிய வீசு மயிலையே—கம்பமுற
...யறிவரியா ராய்ந்துணர்ந்த மாதவத்தோ
...லாறிவரியா ரார்வு.

சிவயா... ௯

று செல்வருநற் பெண்மணியார் வீணைகளு
...பொன் செய்யு மயிலையே—யாடுதலைத
...ருவார் தமைத்தொழுவார்க் கின்னலின்புந்
தார... கரிவார தலம்.

மான்கட் சிறுபூயரைம பாலுமணிக கோபுரமும
வான்கட் டிளைக்கு மயிலையே—யானகற்ற
மெய்யான தேவா லிழைந்தருள்வா ரெம்மையுமான்
மெய்யானை தேவா விருப்பு.

---

ஆய்ந்துணர்ந்தார் வாழி யணிமயிலை வாழிகொன்றை
வேய்ந்தவளை யாம்பிகைபால் வேட்கையொடு—தோய்ந்தப
மாயூர நாதனருள் வாழி வாழியிந்நூல்
வாயூர நன்குணரு வார்.

MAHAMAHOPADHYAYA
U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS 41

முற்றிற்று.

MAHAMAHOPADHYAYA
V. SWAMINATHA IYER LIBRARY
ANMIYUR :: MADRAS 41